

**ந. ரங்கசாமி**
**முதலமைச்சர்**
புதுச்சேரி அரசு

பாண்டிச்சேரி

தேதி: 6·9·2014

## வாழ்த்துச் செய்தி

உலகத் தமிழ்த் தகவல் தொழில்நுட்ப மன்றம் (உத்தமம்) சார்பில் பதின்மூன்றாவது உலகத் தமிழ் இணைய மாநாடு 2014, செப்டம்பர் 19 முதல் 21ஆம் தேதி வரை புதுவைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற இருப்பதையும், இந்த மாநாட்டில், உலகின் பல பகுதிகளில் இருந்து முந்நூறுக்கும் மேற்பட்ட தமிழ் இணையம் சார்ந்த தொழில்நுட்ப வல்லுநர்கள் கலந்துகொண்டு ஆய்வுரை வழங்க உள்ளனர் என்கிற செய்தியும் பெரும் மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது.

கணினி, இணையத்தைப் பயன்படுத்தாத மக்களே இன்று உலகில் இல்லை என்று கூறும் அளவிற்குக் கணினி, இணையம் மக்கள் வாழ்க்கையுடன் இரண்டறக் கலந்துள்ளன. ஒவ்வொரு மொழிபேசும் மக்களும் அவரவர் மொழியைக் கணினி, இணையத்தில் பயன்படுத்தி மிக வேகமாக முன்னேறி வருகின்றனர்.

தமிழ் எழுத்துரு உருவாக்கம், விசைப்பலகையைத் தரப்படுத்தும் முயற்சி, எழுத்துருச்சிக்கலுக்குத் தீர்வு, ஒருங்குறியில் தமிழ் இடம்பெற்றமை உள்ளிட்ட பல தடைக்கற்களைத் தாண்டிதான் கணினி, இணைய வளர்ச்சி தமிழில் நிகழ்ந்துள்ளது. இது, உலகம் முழுவதும் பரவியுள்ள தமிழார்வலர்களால் சாத்தியமானது. தமிழ்க் கணினியை மேலும் தரப்படுத்தவும், வளர்த்தெடுக்கவும் இதுபோன்ற மாநாடுகளும் தொழில்நுட்ப வல்லுநர்களின் கலந்துரையாடல்களும் அவசியமான ஒன்றாகும்.

அந்த வகையில், புதுச்சேரியில் நடைபெறும் இந்த பதின்மூன்றாவது உலகத் தமிழ் இணைய மாநாடு, தமிழ்க் கணினி உலகத்தில் பல ஆக்கப்பூர்வமான செயல்பாடுகளைக் கொண்டுவந்து சேர்க்க உறுதுணையாக அமையும் என்று நம்புகிறேன்.

புதுச்சேரியில் உலகத் தமிழ் இணைய மாநாட்டை நடத்த முன்வந்த உத்தமம் அமைப்பினருக்கு எனது பாராட்டுக்கள். இந்த மாநாடு வெற்றிபெறவும், மாநாட்டினை ஒட்டி வெளியிடப்படும் விழா மலர் பொலிவு பெறவும், எனது உளம் நிறைந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ந. ரங்கசாமி)

✆ அலு. : 2333399, 2335530, 2335328, 2335522 தொலைநகலி: 0413–2333135 இல்லம்: 2271232




पाण्डिच्चेरी विश्वविद्यालय
PONDICHERRY UNIVERSITY
(केन्द्रीय विश्वविद्यालय) (A Central University)

आचार्य (श्रीमती) चन्द्रा कृष्णमूर्ति
कुलपति
**Prof. (Mrs.) CHANDRA KRISHNAMURTHY**
**Vice-Chancellor**

आर. वेन्कटरामन नगर,
R. Venkataraman Nagar,
कालापेट, Kalapet,
पुदुच्चेरी ६०५ ०१४.
Puducherry - 605 014.
भारत. India.


August 22, 2014

## MESSAGE

I am glad to learn that INFITT is bringing out a souvenir as part of its *13th International Conference on Tamil Computing and Tamil Internet* which is to be held at Pondicherry University during 19—21 September 2014 and that INFITT had already organized nine conferences in various countries such as USA, Singapore, Malaysia, Germany etc in collaboration with the prestigious Universities of those countries.

Though we live in the computer age where we cannot exist without computers, we still find many who cannot utilize its accessibility because of the language barrier. I am delighted to learn that the main objective of this organization is to mobilize the expertise and hone up the skills of Tamil researchers and Tamil professionals to foster the development of Tamil language resources in the fields of technology and internet, mainly for pedagogical purposes. Computer-assisted Tamil learning is all one requires through the medium of internet.

I sincerely appreciate the organizers and all the members of INFITT for their efforts and the editors of this souvenir for showcasing the accomplishments of Tamil computing.

CKMurthy
(Prof. CHANDRA KRISHNAMURTHY)
Vice-Chancellor


Tel. : +91-0413-2655175 (Off.); 2656454 (Per.); 2655249 (Res.); Fax : (0413) 2655033; Email : vc@pondiuni.edu.in



# भारतीय प्रौद्योगिकी संस्थान कानपुर
# Indian Institute of Technology Kanpur

प्रो. मु. आनंदकृष्णन्
अध्यक्ष
Prof. M. Anandakrishnan
Chairman

पत्रालय - आई. आई. टी., कानपुर - 208 016 (भारत)
Post Office : IIT Kanpur - 208 016 (India)
Fax : +91-512-259 0260

## வாழ்த்துரை: தமிழ் இணைய மாநாடு - 2014

கணினித்தமிழில் ஆர்வத்துடனும், முழுமுனைப்புடனும் ஈடுபட்டு வந்திருக்கும் அறிஞர்களோடும் வல்லுநர்களோடும் நெருக்கமான பிணைப்பில் இருந்திருப்பது என் வாழ்வின் இனிமைகளில் ஒன்று. இந்த வாய்ப்பு உலகத்தமிழ் தகவல் தொழில்நுட்ப மன்றம் எனும் உத்தமம் அமைப்பின் உருவாக்கம் மற்றும் வளர்ச்சியின்போது பன்மடங்கு கூடியது. உலகெங்கிலும் பல நாடுகளில் தமிழ் இணைய மாநாடுகளைக் கூட்டும் மரபைத் தொடர்ந்து உத்தமம் தன் பதின்மூன்றாவது மாநாட்டை இந்த 2014ஆம் ஆண்டில் செப்டம்பர் 19 முதல் 21 வரை பாண்டிச்சேரியில் கூட்டுகிறது. மாநாட்டின் அமைப்பு, பொருள், ஆய்வுக்கட்டுரைகளின் தரம், பேராளர்கள் மற்றும் வருகையாளர்களின் எண்ணிக்கை என்ற அனைத்திலும் ஒவ்வொரு மாநாடும் முந்தைய மாநாட்டைவிடச் சிறந்து வந்திருக்கின்றன. மலேசியாவில் கூட்டிய சென்ற மாநாடு குறிப்பிடத்தக்க வெற்றி பெற்ற மாநாடு. பாண்டிச்சேரியில் நடைபெறவுள்ள மாநாடு உத்தமத்தோடு இணைந்து செயலாற்றும் நிறுவனங்கள் மற்றும் புரவலர்கள் துணையுடன் சென்ற மாநாட்டையும் விஞ்சும் என்பதில் ஐயமில்லை. இந்த மாநாட்டைப் பாண்டிச்சேரியில் நடத்த முன்வந்துள்ள பாண்டிச்சேரி அரசுக்கும், புதுவை நடுவணரசுப் பல்கலைக்கழகத்துக்கும் ஆழ்ந்த நன்றிகள்.

தனிக்கணினிகளில் எளிதாகத் தமிழைப் புழங்க வசதி கொடுக்க வேண்டும் என்ற உத்தமத்தின் தொடக்கநாள் குறிக்கோள்களைக் காட்டிலும் உத்தமத்தின் உறுப்பினர்களும் மாநாட்டின் பேராளர்களும் தீர்வு காண வேண்டிய சிக்கல்கள் பன்மடங்கு பெருகிக் கொண்டிருக்கின்றன. தொடர்ந்து கொண்டிருக்கும் எண்ணிமப் புரட்சிகளால் எண்ணற்ற கருவிகளில் எண்ணிலடங்கா செயலிகள் கூடிக்கொண்டே போவதுதான் இந்தச் சிக்கல்களுக்குக் காரணம். கணினித் தமிழ் வல்லுநர்கள் இந்தச் சிக்கல்களுக்குப் பெருமளவு தீர்வு கண்டு வருகிறார்கள் என்பதை இந்த மாநாட்டின் கட்டுரைகளே சான்று என்றாலும் வெள்ளம்போல் தொடர்ந்து வரும் எண்ணிம நுட்பங்களின் மாற்றங்களும், ஏற்றங்களும், மலைக்கவைக்கும் கருவிகளின் வேறுபாடுகளும் நாம் இன்னும் செய்ய வேண்டியவை எவ்வளவோ என்பதைக் காட்டுகின்றன. இந்த மாநாடு சிறப்பாக நிகழவும் இதற்கு வந்திருக்கும் பேராளர்கள் நீடித்த பிணைப்பில் தொடர்ந்திருக்கவும், பாண்டிச்சேரியில் அவர்கள் மகிழ்ச்சியோடு தங்கியிருக்கவும் உளமார வாழ்த்துகிறேன்.

(மு. ஆனந்தகிருஷ்ணன் )

4 ஆகஸ்ட் 2014

8/15, Fifth Main Road, Madan Apt., Kasturibai Nagar, Adyar, Chennai-600 020
Email : ananda1928@gmail.com / chairman@iitk.ac.in
Ph. : (R) 044-2491-6291 / +91 9444051133 (M)



மு.பொன்னவைக்கோ

**வாழ்த்துச் செய்தி**

உலகத்தமிழ்த் தகவல் தொழில் நுட்பமன்றம் ( உத்தமம் ),. சிங்கப்பூரில் 2000-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 22-24-ஆம் நாட்களில் நடைபெற்ற தமிழ் இணைய மாநாட்டில் பிறந்தது. கணிப்பொறியிலும் இணையத்திலும் தமிழின் பயன்பாட்டை மேம்படுத்துவதற்குத் தேவையான மென்பொருள்களையும் கருவிகளையும் உருவாக்குவதை முதன்மை நோக்கமாகக் கொண்டு உத்தமம் அமைக்கப்பட்டது. கணித்தமிழ் வளர்ச்சியில், தமிழ்க் கலைச்சொல் ஆக்கல், யூனிகோடு தமிழ் (UNICODE Tamil) மேம்பாடு, இணையதள தமிழ் முகவரி வடிவமைத்தல், தமிழ் வரிவடிவக் குறியீட்டுத் தரப்பாடு, ஆங்கில வரிவடிவத் தமிழ்த் தரப்பாடு, தமிழ் அனைத்தெழுத்துரு தரப்பாடு, தமிழ் எழுத்துரு அறிதல் (Tamil OCR), லினக்ஸில் தமிழ் (Tamil in Linux), போன்ற பல்வேறு ஆய்வுப் பணிகளுக்காக ஆய்வுப் பணிக்குழுக்களை (Working Groups) நிறுவி, ஆய்வுகளைச் செய்து உத்தமம் சிறந்த பணிகளை ஆற்றி வந்துள்ளது. பணிக்குழுக்களின் செயற்பாடுகள் பற்றியும் கணித்தமி.ழ் மற்றும் இணையத்தமிழ் வளர்ச்சி பற்றியும் உத்தமம் 1997-லிருந்து 2013-வரை சிங்கப்பூர், தமிழ்நாடு,, மலேசியா, அமெரிக்கா, ஜெர்மனி ஆகிய நாடுகளில் நடைபெற்ற 12 தமிழ் இணைய மாநாடுகளிலும் கலந்தாய்வு செய்து, கணித்தமிழ் வளர்ச்சிக்கு பெரும்பணி ஆற்றியுள்ளது. இப்பொழுது 13-வது மாநாடு பதுச்சேரியில் நிகழவள்ளது.

இந்த 15 ஆண்டுகளில் நாம் சாதித்தவை என்ன என்று எண்ணிப் பார்க்க வேண்டும். ஏராளமான தமிழ் இணையதளங்கள் பிறந்துள்ளன. பல்வேறு எழுத்துரு தரப்பாடுகளிலிருந்து இரண்டு எழுத்துருத்தரப்பாடுகள் - ஒருங்குறி தமிழ் (Unicode Tamil), அனைத்து எழுத்துருத்தரப்பாடு (TACE-16), ஆகிய இரண்டு தரப்பாடுகள் தமிழக அரசால் அரசின் தரப்பாடுகளாக ஏற்கப் பெற்றுள்ளோம். சொற்செயலிகள், தமிழ் எழுத்துரு அறி மென்மம் (Tamil OCR), பேச்சுத்தமிழை எழுத்துத்தமிழாக்கும் மென்மம், எழுத்துத்தமிழை பேச்சுத்தமிழாக்கும் மென்மம், தமிழ் இயல் மொழிச்செயலாக்கம் போன்ற பல்வேறு மென்பொருள் உருவாக்கப் பெற்றுள்ளோம். உலகு தழுவி வாழும் தமிழ் மக்களும், தமிழில்

ஈடுபாடு உள்ள மற்றையோரும், தமிழ் மொழியைக் கற்கவும், தமிழர் வரவாறு, கலை, இலக்கியம், பண்பாடு பற்றி அறிந்து கொள்ளவும், மழலைக்கல்வி முதல் பட்டப் படிப்பிற்கான பாடப் பொருள்களையும், மிகப்பெரிய தமிழ் மின்நூலகத்தையும் தன்னுட்கொண்டு தமிழ்ப்பணி ஆற்றி வரும் சிறந்ததொரு தமிழ் இணையக் கல்விக் கழகம் கிடைக்கப் பெற்றுள்ளோம்.

ஆனால் இப்படைப்புகளெல்லாம் மக்களைப் போய்ச் சேர்ந்துள்ளனவா? தமிழை ஆட்சி மொழியாகவும் வழக்கு மொழியாகவும் கொண்டுள்ள நாடுகளின் அரசுக்கள் ஏற்று செயல் படுத்துகின்றனவா? இல்லையெனில் அதற்கு உத்தமம் என்ன செய்யவேண்டும் எப்படிச் செயல்படவேண்டும் என்பவைதான் நாம் இம்மாநாட்டில் கலந்தாய்ந்து முடிவு செய்யவேண்டியவை. மேலும் இணையதள தமிழ் முகவரி வடிவமைக்கும் பணி இன்னும் நிறைவு பெறாமல் உள்ளது. இதற்காக அமைக்கப்பட்ட பணிக்குழுத் தலைவருடன் கடந்த தமிழ் இணைய மாநாட்டில் கலந்தாய்வு செய்யப்பட்டது. அந்தப்பணி நிறைவேற, செய்ய வேண்டியவை பற்றிய முடிவெடுக்க வேண்டிய நிலையில் உள்ளோம். அதனையும் இந்த மாநாட்டில் கலந்தாய்வு செய்து முடிவெடுக்கவேண்டும்.

இணையப் பயன்பாட்டிற்கு ஒருங்குறி தமிழ் எழுத்துரு (Unicode Tamil) தரப்பாடு என்றும், பிற பயன்பாடுகளுக்கு அனைத்து எழுத்துரு (TACE-16) தரப்பாடு என்றும் தமிழக அரசு அறிவித்துள்ளது. எல்லாப் பன்பாடுகளுக்கும் அனைத்து எழுத்துரு (TACE-16) தரப்பாடே சிறந்தது எனபதை பல்வேறு ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன. இந்த அனைத்து எழுத்துரு (TACE-16) தரப்பாட்டின் பயன்பாடு கூடினால், ஒருங்குறி சேர்த்தியம் ( Unicode consortium ) ஒருங்குறி தளத்தில் 32-பிட்டு அமைப்பில் அனைத்து எழுத்துரு (TACE-16) தரப்பாட்டினை சேர்க்க இசைவளித்துள்ளது. எனவே, அனைத்து எழுத்துரு (TACE-16) தரப்பாட்டினை பல்வேறு பயன்பாடுகளில் செயல்படுத்தி அதன் பயன்பாட்டினை பெருக்குமாறு கணித்தமிழ் அன்பர்களையெல்லாம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

இந்த ஆண்டு உத்தமத்தின் செயற்குழு புதுச்சேரி மையப் பல்கலைக்கழகத்தின் துணையுடன் 13-வது தமிழ் இணைய மாநாட்டினை புதுச்சேரியில் ஏற்பாடு செயதுள்ளமை மிகுந்த மகிழ்ச்சி அளிக்கின்றது. அதற்காக உத்தமத்தின் செயற்குழு உறுப்பினர்களுக்கு எனது பாராட்டுதல்களையும் புதுச்சேரி மையப் பல்கலைக்கழகத்திற்கு எனது நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பதின்மூன்றாவது தமிழ் இணைய மாநாடு சிறப்பாக நடைபெற எனது உளங்கனிந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன். வாழ்க தமிழ்! வளர்க கணித்தமிழ்!



**கு. கல்யாணசுந்தரம்**

முன்னாள் தலைவர் - உத்தமம் (2009-2011)

தலைவர், 13-ம் தமிழ் இணைய மாநாட்டு நிகழ்ச்சி நிரல் குழு

**வாழ்த்துச் செய்தி**

21ம் நூற்றாண்டு காலத்தில் கணினி பயன்பாடு அனைவருக்கும் இன்றியமையாததாகி விட்டது. பெரிய அளவில் அலுவலகங்களில் மட்டுமே பயன்படுத்தப்பட்ட கணினி ஆண்டு தோறும் சுறுங்கி சுறுங்கி பல உருவங்களில் தோன்றி வந்து கொண்டிருக்கின்றன. தனியார் கணினி (பிஸி(), மடிக்கணினி (தாப்லட் பிஸி) செல்பேசி (மொபைல்) போன்றவை இந்தியாவிலேயே ஆண்டுக்குப் பல கோடி அளவில் விற்கப்பட்டு அவை அன்றாட வாழ்வில் முக்கிய அம்சங்களாகி விட்டன. பள்ளிக்குச் சென்று முறையே கல்வி கற்பதற்குள் சிறுவர்கள் கணினியில் விளையாடி 5-6 வயதிற்குள் கணினி பயன்பாட்டில் வல்லுனர்களாக ஆகிவிடுகிறார்கள். கணினியோடு இணைய வளர்ச்சியும் குறிய கால கட்டத்திலேயே பெரிய அளவில் வளர்ந்து கணினியும் இணையத் தொடர்பும் இல்லாதோர் காட்டுமிராண்டிகள் என்றுகூட கருதப்படும் நிலை வந்துள்ளது.

எந்த ஒரு தொழில் நுட்ப வளர்ச்சியிலும் பயன்பாடு அவரவர் தாய் மொழியில் நடைபெறும் பொழுதுதான் முழுமையடைகின்றது. ஆரம்ப காலத்தில் ஆங்கிலத்தில் தான் கணினியும், இணையம் வழி தகவல், கருத்துப் பரிமாற்றம் நடைபெற இயலும் என்ற நிலை மாறி தமிழ் மொழியிலேயே அனைத்தையும் செய்யும் நிலை குறிகிய காலத்தில் வந்துள்ளது. கணினியிலும், இணையத்திலும் தமிழ்ப் பயன்பாடு மேன்மேலும் வளர்ச்சியடைய கணினிப் பொறி வல்லுனர்களும் பல்கலைக்கழக ஆசிரியர்களும் உயர்நிலை மாணவர்களும் பெருமளவில் தமிழில் செயல்படும் மென்பொருள் தயாரிப்பில் அதிக அளவில் ஈடுபட வேண்டும்.

உத்தமம் கணினித்துறை ஆராய்ச்சியாளர்கள், தனியார் வல்லுனர்கள், பயனர்கள் அனைவரும் ஆண்டுக்கு ஒருமுறையேனும் ஒன்றுகூடி கருத்துப் பரிமாற்றத்திற்கு வழி செய்யும் முறையில் தமிழ் இணைய மாநாடுகளை நடத்தி வருகிறது. அந்த முறையில் இந்த

ஆண்டும் புதுவை அரசின் உதவியுடனும், பாண்டிச்சேரிப் பல்கலைக்கழக உதவியுடன் மாநாடு நடக்க உள்ளது. இந்த மாநாடு நடத்துகின்ற தன்னார்வலர்கள் குழுவில் இந்த ஆண்டும் பங்கு பெறும் வாய்ப்பு கிடைத்ததற்கு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். 12 மாநாடுகள் உலகில் பல இடங்களில் நடைபெற்று 13-ம் மாநாடு நடக்க உள்ளது. இவற்றில் பல்கலைக்கழகப் பேராசிரியர்களும் உயர்நிலை ஆராய்ச்சி மாணவர்களும் பெரிய அளவில் பங்கு பெற்று சுமார் 100 ஆராய்ச்சிக் கட்டுரைகள் வழங்க உள்ளது இந்த தமிழ் இணைய மாநாடுகளின் வளர்ச்சியின் சான்று என்று கருதலாம். இந்த ஆண்டும் இந்தியா மற்றும் இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், ப்ரான்ஸ், சுவிட்சர்லாந்து, அமெரிக்கா எனப் பல நாடுகளிலிருந்தும் ஆராய்ச்சியாளர்கள் பங்கு பெற உள்ளார்கள்.

மாநாடுகளில் கலந்து கொள்ள இயலாதவர்களுக்கு மாநாட்டு கருத்தரங்கு மலர் மாநாட்டில் படைக்கப்பட்டக் கட்டுரைகள் பற்றிய விவரங்களை அறிய வசதி செய்கிறது. இந்த ஆண்டு முதன்முறையாக மாநாட்டு மலர் பன்னாட்டு தொடர் பதிப்புகளுக்கான சிறப்பு எண்ணுடன் (ISSN) வெளியிட உள்ளது ஒரு முக்கிய அம்சம். ISSN அங்கீகாரம் கொண்ட எண்ணுடன் வெளியிடப்படுவை பல்கலைக்கழக நூல் நிலையங்களில் முறையே சேர்க்கப்படுவதால் மாநாட்டுக் கட்டுரைகளை ஆராய்ச்சியாளர்கள் முறையே குறிப்பிட முடியும். 13ம் தமிழ் இணைய மாநாடு செவ்வனே நடைபெற எனது நல்வாழ்த்துகள். இம்மாநாடுகளை நடைபெற வழி செய்யும் தமிழ் நல் உள்ளங்களையும் போற்றுகிறேன், வாழ்த்துகிறேன்.

கு. கல்யாணசுந்தரம்

லுசான், ஸ்விட்சர்லாந்து




வாசு அரங்கநாதன், தலைவர், உத்தமம் நிறுவனம்

வாழ்த்துச் செய்தி

இணையறு கணினித்தமிழ் வளர்ச்சி இணைய மலராக பல கட்டங்களைக் கடந்து வளர்ந்து வந்துள்ளது. கற்களிலும் ஓலைகளிலும் செப்பேடுகளிலும் தமிழை எழுதிய காலம் போய் மின்னணுக்களின் வழி தமிழ் வளர்ந்து வரும் காலக் கட்டத்தில் நாம் இருக்கிறோம். கணினிவழித்தான் பத்தொன்பதாம் நூற்றாண்டு மணிப்பிரவாள நடையை எளிதில் முறியடிக்க இயலுகிறது என்று கூறலாம். இருபதாம் நூற்றாண்டு ஆங்கிலத்தாக்கத்தையும் கணினிவழித் தமிழ் வெற்றிகரமாக எதிர்கொண்டு வருகிறது எனவும் கூறலாம். இணையம் வழித்தமிழ் இம்மாற்றங்களுக்கு அதிவேகமான உந்துதலைக் கொடுத்து வருகிறது. அதிகமான இணையப்பக்கங்களும் இணையப் பூக்களும் பூத்து வரும் இக்காலக்கட்டத்தில் தமிழ் நடையும் தமிழ்ப்பயன்பாடும் வியக்கத்தக்க மாற்றங்களை பெற்று வருகின்றன. தமிழ் கற்பதிலாகட்டும் ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் படைப்பதிலாகட்டும் தமிழ் மின்னூற்கள் வெளிவருவதிலாகட்டும் தமிழ் இலக்கியங்கள் பெருகுவதிலாகட்டும் இலக்கிய ஆராய்ச்சியில் ஈடுபடுவதாகட்டும் பல துறைகளிலும் தமிழ் வளர்ச்சிக்கு இணையம் ஒரு இணையிலா ஊடகமாக விளங்கிவருகிறது. இணையத்தின் வளர்ச்சிக்கு ஏற்ப தமிழ்ப் பயன்பாட்டை அதிகப்படுத்தவேண்டும் என்ற நோக்கத்திலேயே தமிழ் இணைய நிறுவனம் உத்தமம் தனது பணிகளைச் செவ்வனே செய்துவருகிறது என்பதில் ஐயமேதுமில்லை. குறிப்பாக இது ஒரு பன்னாட்டு நிறுவனம் என்பது கணினி வழித் தமிழ் முயற்சிக்கு இன்னமும் மெருகூட்டுகிறது. **கணிவழி இனித் தமிழ் வழி** என்னும் உட்கருத்தோடு தமிழ் மொழிப் பகுப்பாய்வு குறித்த பல ஆராய்ச்சிகளின் வளர்ச்சியை இம்மாநாட்டு மலர் பல கட்டுரைகளின் வாயிலாக விளக்குவது வியக்கத்தக்கது. தமிழ் உள்ளங்களின் எண்ணங்கள் மின் அணுவில் அணுவினை ஆயிரங் கூறிட்டு அணுவில் அணுவை அணுகவல்லாராக அணுகியுள்ளனர் பல உத்தமம் நிறுவன உறுப்பினர்கள். பன்னாட்டினர் இணையம்வழி இணைந்த இணையிலா இந்நிறுவனத்துக்குத் தலைமையேற்கும் வாய்ப்பு நல்கிய தமிழ் நல்லுள்ளங்களுக்கு எனது இணையறு நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு பதின்மூன்றாவது உலகத் தமிழ் இணைய மாநாடு பல வகையிலும் வெற்றி காண என் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**முனைவர் மு.இளங்கோவன்**

தமிழ்த்துறை, காஞ்சி மாமுனிவர் பட்ட மேற்படிப்பு மையம்,

இலாசுப்பேட்டை, புதுச்சேரி – 605 008, இந்தியா

தலைவர், மாநாட்டு ஊள்நாட்டுக் குழு

புதுச்சேரியில் பதின்மூன்றாவது உலகத் தமிழ் இணைய மாநாட்டை நடத்துவதற்குரிய வாய்ப்பினை வழங்கிய உத்தமம் அமைப்பினருக்கு என் நெஞ்சார்ந்த நன்றியை முதலில் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த மாநாட்டைப் புதுச்சேரியில் நடத்துவதற்குத் தம் மனம் நிறைந்த இசைவினைத் தெரிவித்ததுடன் மாநாடு சிறப்பாக நடைபெறுவதற்கு உரிய அறிவுரைகளை அவ்வப்பொழுது வழங்கிய புதுச்சேரி மாநிலத்தின் **மக்கள் முதல்வர் மாண்புமிகு ந. அரங்கசாமி** அவர்களுக்குப் பணிவுநிறைந்த என் வணக்கமும் நன்றியும் உரியவாகும். அதுபோல் இந்த மாநாடு சிறப்பாக நடைபெற வாழ்த்துரை வழங்கிப் பெருமை சேர்த்த புதுச்சேரி நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களுக்கும், புதுச்சேரி சட்டப்பேரவைத் தலைவர் அவர்களுக்கும் மற்ற அமைச்சர் பெருமக்களுக்கும் என் அன்பார்ந்த நன்றி உரியதாகும்.

உலகத் தமிழ் இணைய மாநாட்டைச் சிறப்பாக நடத்துவதற்குத் தாயுள்ளத்துடன் முன்வந்து இடம் அளித்ததுடன் உலகம் முழுவதிலிருந்தும் வருகை தரும் தமிழ் இணையக் கல்வியாளர்களை வரவேற்றுச் சிறப்புச் சேர்க்க முன்வந்த புதுவைப் பல்கலைக்கழகத்தின் மாண்பமை துணைவேந்தர் **பேராசிரியர் சந்திரா கிருட்டினமூர்த்தி** அவர்களுக்கு என் நெஞ்சம் நிறைந்த நன்றி உரியதாகும்.

மாநாட்டு நாள், இடம் உறுதிப்படுத்தியதிலிருந்து மாநாடு குறித்த செய்திகளை ஆர்வமுடன் வெளியிட்டு எங்கள் முயற்சியை ஊக்கப்படுத்திய ஊடகத்துறை நண்பர்களையும், எங்களுடன் கைகோர்த்து மாநாடு சிறப்பாக நடைபெறுவதற்குத் தோள்கொடுத்து உழைத்த நல்லுள்ளங்களையும் இந்த நேரத்தில் நன்றியுடன் நினைவுகூர்கின்றேன். மாநாட்டிற்குக் கட்டுரை வழங்கியும், பேராளர்களாக வருகை தந்தும் சிறப்பிக்கும் பன்னாட்டுத் தமிழுறவினர்களுக்கு எங்களின் இனிய வரவேற்பும் வாழ்த்தும் உரியவாகுக.

உலகத் தமிழ் இணைய மாநாட்டிற்கு வருகை தருவதன் வாயிலாகப் பெரும்பாவலர் பாரதியாரும், பாவேந்தர் பாரதிதாசனும், தவவாழ்வில் தோய்ந்த அரவிந்தரும் வாழ்ந்த இப்புதுச்சேரி மாநிலத்தின் இயற்கை அழகையும், முன்னேற்றத்தையும் காண உள்ள உங்கள் அனைவரையும் இருகை குவித்து வரவேற்கின்றேன்.

பணிவுநிறைந்த

மு.இளங்கோவன்